# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# OS. No. 10/2019

**15.09.2025**

**P.W.2- வீரணன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 முதல் 4, 13 முதல் 15 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது தகப்பனார் பெயர் பாண்டியன் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் ராசுத்தேவர் என்றால் சரிதான். ராசுத்தேவருக்கு மொத்தம் 8 பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் மணியம்மாள், அமுதா ஆகியோர்கள் பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படியார்களில் கணேசன் என்பவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராசுத்தேவருக்கு கிரையம் மற்றும் பூர்வீக சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். உசிலம்பட்டி டவுனில் பேரையூர் ரோட்டிற்கு மேற்கேயுள்ள தாவா சொத்துக்கள் எனது அப்பாவிற்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களுக்கு தெற்கே 2 கி.மீ தூரத்தில் எனது தாத்தா கிரையம் வாங்கிய சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் தான் பம்பு செட், மோட்டார் உள்ளன என்றால் சரிதான். மேற்படி தோட்டத்திற்கான மோட்டார் மின்இணைப்பு (சர்வீஸ் எண்.484) தர்மர் பெயரில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி தர்மர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தற்போது மேற்படி சர்வீஸ் எண்.484 மின்இணைப்பு அவரது மனைவி பார்வதி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தோட்டமானது 2 குழி நிலம் (1 ஏக்கர் 10 சென்டு) ஆகும். மேற்படி நிலத்தை வாதி, பிரதிவாதிகள் அனைவரும் அனுபவம் செய்து வருகிறோம். தாவா சொத்துக்களில் தெற்கேயுள்ள தோட்டத்து சொத்துக்களை தாவா சொத்துக்களாக சேர்த்தேனா என்றால் இல்லை. மேற்படி சொத்துக்கள் மானிய சொத்துக்கள் என்பதால் சேர்க்கவில்லை. மேற்படி விவரம் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி மானிய சொத்துக்கள் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 3 குழி ( 1 ஏக்கர் 80 சென்டு) ஆகும். மேற்படி சொத்துக்கள் யாருக்கு மானியமாக கிடைத்தது என்றால் தெரியாது. எனது தாத்தா ராசுத்தேவர் என்பவர் கடந்த 20.08.1956ல் சர்வே எண்.334ல் ஏக்கர் 4 சென்டு 93ல் மையம் 1 ஏக்கர் 35 சென்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால்

தெரியாது. எனது தாத்தா 23.10.1982ல் சர்வே எண்.333-1ஏ யில் ஏக்கர் 24 சென்டு 96ல் 1 ஏக்கர் 50 சென்டும், சர்வே எண்.330-6ல் ஏக்கர் 4 சென்டு 96ல் கிழக்கு கடைசியில் சென்டு 17ம், சர்வே எண்.333-1ஏ யில் ஏக்கர் 24 சென்டு 96ல் வடக்கு கடைசியில் மேல்புறம் 17 சென்டும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை தான் எனது தகப்பனாருக்கும், தர்மருக்கும் பாகமாக கிடைத்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம். மேற்படி சொத்துக்கள் தர்மருக்கும், எனது தகப்பனாருக்கும் பாகமாக கிடைத்ததால் தான் மேற்படி தோட்டத்து மின்இணைப்பு தர்மர் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. உசிலம்பட்டி டவுனில் உள்ள சொத்தை பாகம் பிரித்தோம் என்றால் பாகமாக பிரிக்கவில்லை, கூட்டாக கிரையம் செய்து கொடுத்தோம். 02.09.1992ல் முத்துக்கண்ணுத்தேவர், பாண்டியன், தங்கராஜ், தர்மர், கணேசன், முருகன் ஆகியோர்கள் சேர்ந்து தங்கராஜ் ஒரு தரப்பினராகவும், மற்றவர்கள் ஒரு தரப்பினராக இருந்து மேற்படி சொத்தை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் முத்துக்கண்ணுத்தேவர், பாண்டியன், தர்மர், கணேசன், முருகன் ஆகியோர்களுக்கு வடபுறம் பாகமாக கிடைத்தது என்றால் சரியல்ல. தென்புறம் தங்கராஜ் என்பவருக்கு தனி பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தங்கராஜுக்கு மேற்படி தென்புறம் கடையை ஒதுக்கியதால் மற்ற சொத்துக்களில் அவருக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் தங்கராஜுக்கு பாகம் கொடுக்கப்படவில்லை என்றால் பாகம் பிரிக்கப்படவில்லை. முத்துக்கண்ணுத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது வாரிசுகள் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் கூட்டு சொத்தாக உள்ளது. பிரிக்கப்படவில்லை. மேற்படி முத்துக்கண்ணுத்தேவரின் வாரிசுகள் அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டு அவர்களின் சொத்துக்களை பல நபர்களுக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் பாகம் ஆகவில்லை. முருகன் அவருக்கு கிடைத்த பாக சொத்துக்களை கிரையம் கொடுத்தார் என்றால் பாகம் ஆகவில்லை. தோட்டத்தில் ஆளுக்கு ஒரு வீடு உள்ளது என்றால் ஒரே வீடாக உள்ளது. தனித்தனியாக இல்லை. தாவா சொத்துக்களை பொருத்து முத்துக்கண்ணுத்தேவர், கணேசன், முருகன் ஆகியோர்களுக்கு பாகமாக கிடைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால்

சரியல்ல. கூட்டாக தான் அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள தோட்டத்தை எனது தகப்பனாருக்கும், தர்மர் என்பவருக்கு பாகமாக கிடைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கடை சொத்தை பொறுத்தவரையில் எனது தகப்பனார், தர்மர், முத்துக்கண்ணன், முருகன் ஆகியோர்கள் தான் கிரையம் கொடுத்துள்ளார்கள், தங்கராஜ் கிரையம் கொடுக்கவில்லை என்றால் அவருக்கு கடை தேவைப்படுவதால் கிரையம் கொடுக்கவில்லை. தாவா சொத்துக்களை பொறுத்து எங்களுக்கும், தர்மருக்கும் பாகம் கிடையாது என்றால் சரியல்ல. எங்களுக்கும், தர்மருக்கும் கிடைத்த பாக சொத்தினை வழக்கு சொத்தாக காட்டாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கவில்லை, கூட்டாக உள்ளது. மேற்படி இரண்டு சொத்துக்களும் எனது தகப்பனார் பெயரிலும், தர்மர் பெயரிலும் நில வரி ரசீதுகள் மற்றும் அடங்கல் உள்ளன என்றால் இல்லை. மேற்படி விவரங்களை மறைத்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.15 17:25:44 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.